**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**
**வேலூர் மாவட்டம்**

**அறிவிக்கை எண்/01/ 2022** **நாள்: 13.10.2022**

வேலூர் மாவட்டத்தில் கிராம உதவியாளர் பதவிக்கான 40 காலிப்பணியிடங்களுக்கு, இனச்சுழற்சி முறை எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் நேரடி நியமனம் செய்வதற்காக தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய கட்டு |
|---|---|---|
| கிராம உதவியாளர் | 40 | ரூ.11,100 – 35,000<br>(சிறப்பு காலமுறை ஊதியம்)<br>அட்டவணை – IV<br>நிலை 6 |

**முக்கிய தேதிகள்:**

| | | | |
|---|---|---|---|
| அ. | அறிவிக்கை நாள் | : | 10.10.2022 (திங்கள் கிழமை) |
| ஆ. | விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | : | 07.11.2022 (திங்கள் கிழமை) |
| இ. | வாசித்தல் மற்றும் எழுதுதல் திறனறித்தேர்வு நடைபெறுநம் நாள் | : | 30.11.2022 (புதன் கிழமை) |
| ஈ. | நேர்முக தேர்வு | : | 15.12.2022 மற்றும் 16.12.2022 (வியாழக் கிழமை மற்றும் வெள்ளிக் கிழமை) |

**தகுதிகள் :**

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (முடிவடைந்து இருக்க வேண்டும் | அதிகபட்ச வயது (முடிவடைந்து இருக்க கூடாது) |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் ஆதிதிராவிடர் (அருந்ததியினர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; / சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய வகுப்பினைச் சார்ந்தவர்கள் | 21 வயது | 37 வயது |
| 2. | ஏனையோர் | 21 வயது | 32 வயது |

குறிப்பு :

அரசாணை (நிலை) எண் 91, மனித வள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 13.09.2021 –இன்படி அரசுப் பணிகளில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்ச வரம்பு மேலும் 2 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது.

வயது வரம்பு சலுகை :

- முன்னாள் இராணுவத்தினர்

தெரிவு நடத்தப்படும் ஆண்டின் ஜூலை முதல் நாள் அன்று 55 வயதிற்கு குறைந்த ஆதிதிராவிடர் ஆதிதிராவிடர் (அருந்ததியினர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; / சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகியோர் 50 வயதிற்கு குறைந்த 'ஏனையோர்" . (தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016– பிரிவு–63(1)).

- மாற்றுத்திறனாளிகள்

மாற்றுத் திறனாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்புச் சலுகை பெற தகுதியுடையவராவர்கள். ஆனால், அவர் தேர்வு செய்யப்பட்டுள்ள பதவியினை திறமையுடன் செய்து முடிப்பதற்கு அவருடைய குறைபாடு தடையாக இல்லாமல் இருக்கிறதென்றால் தகுதியுடையவராவார். (தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016– பிரிவு–64.)

கல்வித் தகுதி (01.07.2022 அன்று உள்ளபடி)

01.07.2022–ஆம் தேதி அன்று விண்ணப்பதாரர்கள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1. குறைந்தபட்ச கல்வித்தகுதி : 5 –ஆம் வகுப்பு தேர்ச்சி
2. தமிழில் எழுத மற்றும் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

இதர தகுதிகள் :

1. வண்டி ஓட்டுதல் / இயக்குதல் திறன் (Riding / Driving Skill)
2. பணி நியமனம் செய்யப்படுவதற்கு அவருடைய ஒழுக்கமும் முன்வரலாறும் அவரைத் தகுதிப்படுத்துவனவாக இருக்க வேண்டும்.
3. இருதாரமணம் :
    - ஆண் விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் உடையவராக இருத்தல் கூடாது.
    - விண்ணப்பதாரர் பெண்ணாக இருப்பின், ஏற்கனவே மனைவியுடன் வாழும் ஒருவரைத் திருமணம் செய்தவராக இருத்தல் கூடாது.
4. விண்ணப்பதாரர் சம்மந்தப்பட்ட வட்டத்தை சேர்ந்தவராகவும், அந்தவட்ட எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருக்க வேண்டும். நிரந்தர முகவரிக்கு

ஆதாரமாக வாக்காளர் அடையாள அட்டை /ஆதார் அட்டை/குடும்ப அட்டை/ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

முன்னுரிமை :

(1) ஒன்றாம் வகுப்பு முதல், தொடர்புடைய பணிவிதிகளில் நேரடி நியமனமுறைக்கென வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிவரை (ஒன்றாம் வகுப்பு முதல் 10/12 ஆம் வகுப்புகள், பட்டயம், இளங்கலை/முதுகலைப்பட்டங்கள்) முழுவதுமாகத் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் மற்றும் அச்சட்டத்திற்கான 2020 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின்கீழ் முன்னுரிமை வழங்கப்பட தகுதியுடையவர்கள் ஆவர்.

(2) இதர மொழிகளை பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று தோ;வுகளை மட்டும் தமிழில் எழுதியவர்கள் இம்முன்னுரிமை ஒதுக்கீட்டிற்கு தகுதியுடையவர் அல்லர்.

(3) 1 முதல் 9 ஆம் வகுப்பு வரை பள்ளிக்கு செல்லாமால் நேரடியாக 10 ஆம் வகுப்புத் தேர்வினை எழுதி தேர்ச்சி பெற்ற தனித் தேர்வர்கள் மற்றும் பிற மாநிலங்களில் தமிழ் அல்லாமல் இதர மொழியினை பயிற்று மொழியாக கொண்டு பயின்று, பின்பு இம்மாநிலத்தில் நேரடியாகச் சேரும் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்புகள் வரை தமிழ் வழியில் பயின்றவர்கள் இம்முன்னுரிமைக்குத் தகுதியுடையவர் அல்லர்.

(4) விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் மூலம் தமிழ்வழியில் கல்வி பயின்றவர்கள் என்பதை உறுதி செய்ய இயலாத நிலையில் தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களை அரசாணை (நிலை) எண் 82, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 16.08.2021 இல் இணைப்பு I மற்றும் II இல் குறிப்பிட்டுள்ள படிவத்தில் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

(5) (அ) கொரோனா தொற்றினால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞா;கள் (மகன்/மகள்) நோ;வில் கோவிட் 19 இறப்பு உறுதிப்படுத்தும் குழுத்தலைவரால் ஒப்பமிடப்பட்ட கோவிட் இறப்பிற்கான அலுவலர் ஆவணச் சான்றிதழ் அடிப்படையில் முன்னுரிமை பெறத் தகுதியுடையவராவார்கள்.

(ஆ) இதர காரணங்களினால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞா;கள் (மகன்/மகள்)

(இ) தனியார் மற்றும் அரசால் நடத்தப்படும் அனாதை இல்லங்களில் தங்கி பயின்று வளர்ந்து வரும் தாயையும், தந்தையையும் இழந்த வாரிசுதாரா;கள் அவ்வில்லங்களிலிருந்து பெறப்படும் சான்றிதழின் அடிப்படையிலும்,

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் சேரமுடியாத கிராமப்புற தாய், தந்தையற்ற நபா;கள் வருவாய் வட்டாட்சியர் மூலம் பெறப்படும் 'தாய்

தந்தையற்றோர்" சான்றிதழ் அடிப்படையிலும் முன்னுரிமை பெற தகுதியுடையவர்களாவார்.

(6) முதல் தலைமுறை பட்டதாரி சான்றின் அடிப்படையில் முன்னுரிமை கோருவோர் இவ்வறிவிப்பாணை வெளியாகும் தேதிக்கு முன்னதாக வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட முதல் தலைமுறை பட்டதாரி சான்றினை பெற்றவராக இருக்க வேண்டும்.

இட ஒதுக்கீடு :

(1)கிராம உதவியாளர் பணியிடத்திற்கான தேர்வி இனச்சுழற்சி விதிகள் பின்பற்றப்படும்.

(2)நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் காலிப்பணியிடங்களில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு தெரிவு செய்யப்பட தேர்ச்சியும், தகுதிவாய்ந்த பெண் விண்ணப்பதாரா;கள் கிடைக்கப்பெறாதவர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் அதே வகுப்பைச் சோ;ந்த தகுதி வாய்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும் (தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 26(5)– குறிப்பிட்டுள்ளவாறு).

திருநங்கை விண்ணப்பதாரர்களுக்கான இட ஒதுக்கீடு :

1) திருநங்கை விண்ணப்பதாரர்களில், பெண் என தன்னை அடையாளப் படுத்திக் கொள்ளும் விண்ணப்பதாரர் பெண்களுக்கான 30 சதவீதம் மற்றும் பொதுப்பிரிவினருக்கான 70 சதவீதம் (ஆண் மற்றும் பெண்) ஆகிய இரண்டு இட ஒதுக்கீட்டின் கீழும் கருதப்படுவர்.

2) திருநங்கை விண்ணப்பதாரர்களில் ஆண் அல்லது மூன்றாம் பாலினத்தவர் என தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் விண்ணப்பதாரர் பொதுப்பிரிவினருக்கான 70 சதவீதம் இட ஒதுக்கீட்டின் கீழ் (ஆண் மற்றும் பெண்) கருதப்படுவர்.

3) தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்தில் இருந்து பெறப்பட்ட திருநங்கைகள்/திருநங்கை (ஆண்)/திருநங்கை (பெண்) சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரா;களுக்கு மட்டுமே மேற்குறிப்பிட்ட இட ஒதுக்கீடு பொருந்தும்.

4) திருநங்கைகள்/திருநங்கை (ஆண்)/திருநங்கை (பெண்) தொடா;பான தகவல்கள் தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் மூலம் சரிபார்க்கப்படும். இதில் முரண்பாடு இருப்பின் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5) சாதிச்சான்றிதழ் வைத்துள்ள ஆதிதிராவிடர்/ஆதிதிராவிட (அருந்ததியர்) பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த திருநங்கை விண்ணப்பதாரர் அவர்களது சமூகத்தினைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுவர்.

6) ஆதிதிராவிடர்/ஆதிதிராவிட (அருந்ததியர்) பழங்குடியினர் வகுப்பைத் தவிர மற்ற வகுப்பினைச் சார்ந்த மற்றும் அப்பிரிவின் அடிப்படையில் சாதிச் சான்றிதழ் பெற்றுள்ள திருநங்கை விண்ணப்பதாரர் அவருடைய வகுப்பு அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆகிய இரண்டு வகுப்புகளில் அவருக்கு சாதகமாக தோன்றுகின்ற ஒன்றைத் தேர்வு செய்யலாம்.

7) சாதிச்சான்றிதழ் இல்லாத திருநங்கைகள், தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக விண்ணப்பத்தில் குறிப்பிடும் பட்சத்தில் ஏனையோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்)/சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த திருநங்கைகள் சாதிச்சான்றிதழ் வைத்திருந்தாலும் தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக கருதும்படி விண்ணப்பத்தில் குறிப்பிடும் பட்சத்தில் அவர்கள் தங்களது உரிமை கோரலுக்கு ஆதாரமாக சாதிச்சான்றிதழை இணைக்க தேவையில்லை இருப்பினும் அவர்கள் திருநங்கைகளுக்கான அடையாள அட்டையை உரிமை கோரலுக்கு ஆதாரமாக இணைக்க வேண்டும்.

8) சமூகப் பிரிவின் அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை தேர்வு செய்வது தொடர்பாக திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து சலுகைகளும் அவர்களால் சமர்ப்பிக்கப்படும் தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்தால் வழங்கப்படும் அடையாள அட்டையை சார்ந்தே அமையும். விண்ணப்பதாரர் திருநங்கைக்கான அடையாள அட்டையை சமர்ப்பிக்க தவறினாலோ அல்லது மற்ற வாரியங்களால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினை சமர்ப்பித்தாலோ விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்கு பின்னர் நிராகரிக்கப்படும்.

**உடற்தகுதி சான்றிதழ் :**

இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள உடற்தகுதியினை பெற்றிருக்க வேண்டும். ( தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள் 1920, விதி 10–இன் படி)

| உடற்தகுதி சான்றிதழ் படிவம் | நிர்ணயிக்கப்பட்டுள்ள பார்வையின் தரம் |
|---|---|
| தமிழ்நாடு கிராம உதவியாளர்கள சிறப்பு விதியின் கீழ் | பார்வை தரம் – III அல்லது அதற்கு மேம்பட்ட தரம். |

**படித்தல் மற்றும் எழுதுதல் திறனறி தேர்வு :**

| பாடம் | அதிகபட்ச மதிப்பெண்கள் |
|---|---|
| படித்தல் : தமிழ் மற்றும் ஆங்கிலம் | 10 |
| எழுத்துத் தேர்வு : | 30 |
| மொத்தம் | 40 |

**தெரிவு செய்யும் நடைமுறை :**

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் நாளேடுகளில் வெளியிடப்படும் அறிவிக்கை மூலம் பெறப்படும் விண்ணப்பங்களிலிருந்து இனசுழற்சி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு,

திறனறிதல் தேர்வு, நேர்முகத் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு ஆகியவற்றில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் நியமன இட ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி தெரிவு செய்யப்படுவர்.

**தடையின்மைச் சான்று :**

அரசு பணியாளர்கள் தங்களது துறையிலிருந்து தடையின்மைச் சான்று பெற்று சான்றிதழ் சரிபார்ப்பின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் :**

1. அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவு நடைபெறுவதற்கு முன்பு வரை காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்கு உட்பட்டதாகும்.

2. விண்ணப்பதாரா;கள் தேர்வு எழுதுவதற்கும், சான்றிதழ் சரிபார்ப்புக்கும் மற்றும் நோ;காணல் தேர்விற்கும் தங்களது சொந்த செலவில் வரவேண்டும்.

3. இப்பதவியில் பணியமர்த்தப்படும் ஒவ்வொருவரும், பதவிப் பொறுப்பிலிருக்கும் கிராமத்தில் அப்பதவிப்பொறுப்பில் இருக்கும் காலம் வரை தொடர்ந்து வசிக்க வேண்டும்.

4. மத்திய அல்லது மாநில அரசின் கீழ் உள்ள நிறுவனங்கள் உள்ளாட்சி மன்றங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், சட்டத்தின் வாயிலாக நிறுவப்பட்ட நிறுவனங்கள், அரசுத் துறை கழகங்கள், பல்கலைக் கழகங்கள் முதலியவற்றில் முறையாகவோ /தற்காலிகமாகவோ பணிபுரிந்து வருவது/பணிபுரிந்தது குறித்த தகவல்களை விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன் அதற்கான ஆவணங்களை இணைக்க வேண்டும்

5. விண்ணப்பதாரார் பெயரில் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருத்தல், கைது செய்யப்பட்டிருத்தல், குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருத்தல், வேலைக்கு ஆட்கள் தெரிவு செய்யும் ஏதேனும் ஒரு முகமையினால் தடை/தகுதியின்மை செய்யப்பட்டிருத்தல், ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல், கிளர்ச்சி அல்லது ஏதேனும் அரசியல் அமைப்பில் பங்கேற்பு, பாராளுமன்ற/சட்டமன்ற தேர்தலில் பங்கேற்றல் ஆகியவை குறித்த சரியான மற்றும் உண்மையான தகவல்களை விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் தெரிவிக்க வேண்டும். தொடர்புடைய ஆவணங்களை சான்றிதழ் சரிபார்ப்பின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

6. இட ஒதுக்கீடு, வயது, கல்வித் தகுதி மற்றும் இதர அடிப்படைத் தகுதிகள் குறித்து விண்ணப்பதாரர் அளித்த விபரங்கள் தவறு எனத் தெரியவரும் பட்சத்தில், அத்தகைய விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்க கடைசி நாள் :**

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் தமிழக அரசின் இணையதளம் (https://www.tn.gov.in), வருவாய் நிருவாகத் துறையின் இணையதளம் (https://cra.tn.gov.in) மற்றும் வேலூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளம் (https://vellore.nic.in) மூலம் 07.11.2022 வரை விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக மட்டுமே வரவேற்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம்.